ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
தொலைபேசி : 044 – 25670769
நிகரி: 044 – 25675849
இணையதளம்: www.tnrd.gov.in

**கடித எண்.34455/இ6(1)/2010–2, நாள் 7.2.2011**

அனுப்புநர்
திரு.கா.அலாவுதீன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்,
சென்னை–15.

அய்யா,

பொருள்: பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணிகள் – வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையிலிருந்து உதவி இயக்குநர் நிலை பதவி உயர்வு பெற பணித் தகுதி பெறுதல் – மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்கள் பணி மாற்றம் செய்தல் – தடையாணை பிறப்பிக்கப்பட்டது – விலக்களிக்கக் கோருதல் – அறிவுரைகள் வழங்குவது தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.921, பொது (சட்ட அலுவலர்கள்) துறை, நாள் 8.10.2010.
2. தங்கள் கடிதம் ந.க.எண்.14900/09/ஜிஇ 2.1, நாள் 26.12.10.
3. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் நேர்முகக் கடித எண்.39576/10/கே1, நாள் 18.11.10 (ம) 30.11.10.

-----

பார்வையில் உள்ள கடிதங்களின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. மக்கள் தொகை கணக்கெடுப்பு விதிகள் 1990, விதி 8(vi)ல், மாவட்ட முதன்மை மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அலுவலர் (District Principal Census Officer) / மாவட்ட ஆட்சியர் (District Collector)ன் ஒப்புதலின்றி மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களை பணிமாறுதல்கள் செய்யக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. எனவே, மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகளுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாத வகையில், அரசு கடித எண்.21565/இ1/09–1, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 6.10.2009ல் வெளியிடப்பட்ட அறிவுரைகளின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சார்ந்த வட்டார வளர்ச்சி அலுவலர்களை, கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை மக்கள் தொகை

கணக்கெடுப்பு அலுவலர் (District Principal Census Officer) / மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன், பணியிட மாறுதல் செய்து கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

3. இக்கடிதம் பொதுத் (ம.தொ.க) துறை அ.சா.எண்.1044/2011–1, நாள் 18.1.2011ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்
மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.